| உயர்கல்வி அமைச்சின் சுனாமி புனரமைப்பு திட்டத்தின் கீழான வந்தாறுமூலை வளாக 200 மாணவர்களுக்கான ஆண்கள் விடுதி | 182.00 | - | 73.00 | 73.00 | - |
| **மொத்தம்** | **1606.60** | **197.85** | **350.85** | **798.02** | - |

### ஆ. திருகோணமலை வளாகம்

| பெயர் | TCE Rs. | 2013 இல் செலவு (ரூபா) | 2014 இல் செலவு (ரூபா) | 31.12.2014 இல் திரண்ட செலவு | பௌதீக முன்னேற்றம் % தில் |
|---|---|---|---|---|---|
| 100 மாணவர்களுக்கான ஆண்கள் விடுதித்திட்ட நிர்மானம் | 100 | 15.43 | 55.16 | 72.19 | 97% |
| 100 மாணவர்களுக்கான பெண்கள் விடுதித்திட்ட நிர்மானம் | 100 | 17.33 | 25.39 | 71.33 | - |
| மாணவர்களுக்கான புத்துயிராக்க மைய நிர்மானம் | 45.5 | 6.88 | 17.59 | 24.47 | 66% |
| ஆய்வுகூடம் கட்டிட நிர்மானம் | 14.0 | 5.77 | 5.91 | 11.68 | 100% |
| விளையாட்டு மைதான நிர்மானம் | 50.0 | 0 | 23.52 | 23.52 | 60% |
| பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதி | 410 | 0 | 74.35 | 74.36 | 3% |
| தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கான கட்டிடத்தொகுதி | 304.4 | Nil | 28.42 | 28.42 | 8% |
| நூலகத்திற்கான கட்டிடத்தொகுதி | 326.2 | Nil | 30.08 | 30.08 | 5% |
| பொழுது போக்கு மையத்துடன் கூடிய சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தொகுதி | 130.4 | Nil | 23.23 | 23.24 | 3% |
| **Total** | **1480.5** | **45.41** | **310.65** | **359.29** | - |

## 17. நிதி நிலைமை விபரம் (செலவு)

### அ. கி.ப.கழகம்

| விபரம் | 2014இல் ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா) | 2014 இல் செலவுகள் (ரூபா) | சேமிப்பு/ மிகுதி (ரூபா) |
|---|---|---|---|
| அ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்கள | 544,390,000.00 | 642,193,812.28 | (97,803,812.28) |
| ஆ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மூலதன செலவீனங்கள் | 465,000,000.00 | 504,332,653.76 | (39,332,653.76) |
| இ. செயற் திட்டம் - உள்ளூர் நிதி | - | - | - |
| ஈ. செயற் திட்டம் - வெளிநாட்டு நிதி | - | - | - |
| **மொத்தம்** | **1,009,390,000.00** | **1,146,526,466.04** | **(137,136,466.04)** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| விபரம் | 2014இல் ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா) | 2014இல் செலவுகள் (ரூபா) | சேமிப்பு/ மிகுதி (ரூபா) |
|---|---|---|---|
| அ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்கள | 121,364,000.00 | 131,415,474.76 | (10,051,474.76) |
| ஆ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மூலதன செலவீனங்கள் | 400,000,000.00 | 215,226,290.92 | 184,773,709.08 |
| இ. செயற் திட்டம் - உள்ளூர் நிதி | - | - | - |
| ஈ. செயற் திட்டம் - வெளிநாட்டு நிதி | - | - | - |
| **மொத்தம்** | **521,364,000.00** | **346,641,765.68** | **174,722,234.32** |

## 18. நிதி நிலைமை விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்)

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| வருமான மூலங்கள் | 2014இல் ஒதுக்கம் (ரூபா) | 2014இல் திரட்டப்பட்டது (ரூபா) | பற்றாக்குறை/ மேலதிகம் (ரூபா) |
|---|---|---|---|
| பட்டப்படிப்புக் கற்கை<br>பட்டப்பின்படிப்புக் கற்கை | 7,750,000.00 | 7,660,712.60 | (89,287.40) |
| ஆலோசனைகள் | - | - | - |
| ஏனையவை | 8,000,000.00 | 12,137,759.75 | 4,137,759.75 |
| **மொத்தம்** | **15,750,000.00** | **19,798,472.35** | **4,048,472.35** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| வருமான மூலங்கள் | 2014இல் ஒதுக்கம் (ரூபா) | 2014இல் திரட்டப்பட்டது (ரூபா) | பற்றாக்குறை/ மேலதிகம் (ரூபா) |
|---|---|---|---|
| பட்டப் படிப்புக் கற்கை | 1,850,000.00 | 3,082,494.03 | 1,182,494.03 |
| பட்டப்பின்படிப்புக் கற்கை | - | - | - |
| ஆலோசனைகள் | - | - | - |
| ஏனையவை | 510,000.00 | (72,235.96) | (582,235.96) |
| **மொத்தம்** | **2,360,000.00** | **3,010,258.07** | **600,258.07** |

## 19. நிதி செயற்றிறன் ஆய்வு - 2014

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| தலைப்பு | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு (ரூபா) |
|---|---|---|
| மாணவர் ஒருவருக்கான மீண்டெழும் செலவு (மீ.செ) | மீ.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 153,929.49 |
| மாணவர் ஒருவருக்கான முதலீட்டுச் செலவு (மு.செ) | மு.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 120,885.10 |
| **மொத்தம்** | | **274,814.59** |

### ஆ. திருகோணமலை வளாகம்

| தலைப்பு | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு (ரூபா) |
|---|---|---|
| மாணவர் ஒருவருக்கான மீண்டெழும் செலவு (மீ.செ) | மீ.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 200,023.55 |
| மாணவர் ஒருவருக்கான முதலீட்டுச் செலவு (மு.செ) | மு.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 92,310.49 |
| **மொத்தம்** | | **292,334.04** |

## 20. 2014ஆம் ஆண்டில் பெறப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் விபரம்

### அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

| உட்கட்டமைப்பு வசதிகள் | வெவீனம் (மில்லியன் ரூபாவில்) | பொதீக முன்னேற்றம் |
|---|---|---|
| கலைகலாசார பீட கட்டிடத்தொகுதியின் கட்டுமானம் | 121 | 100% |
| நூலக கட்டிடத்தொகுதியின் கட்டுமானம் | 171 | 100% |
| வர்த்தக முகாமைத்துவ பீட கட்டிடத்தொகுதியின் கட்டுமானம் | 230 | 100% |
| மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில அமைந்துள்ள சௌக்கிய பராமரிப்பு பீட பேராசிரியர் அலகுக்கான கட்டிடத்தொகுதியின் கட்டுமானம் | 299 | 33% |
| கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட கட்டிடத்தொகுதியின் கட்டுமானம் | 360 | 24% |
| கலைகலாசார பீடத்திற்கான விரிவுரை மண்டபத்துடன் கூடிய கேட்போர்கூட கட்டுமானம் | 44.6 | 82% |

### ஆ. திருகோணமலை வளாகம்

| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | செலவீனம் ரூபா | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| 10 மீற்றர் அகலமானதும், 200 மீற்றர் நீளமானதுமான இருவழி தாரிடப்பட்ட வீதி அமைத்தல் | 9,964,146.99 | 73% |
| களஞ்சியசாலை கட்டிட நிர்மானம் | 3,604,198.72 | 85% |
| கற்கல் பதிப்பதன் மூலம் உட்புற நடைபாதை மேம்படுத்தல் | 12,316,710.68 | 80% |

| | | |
|---|---|---|
| வளாகத்தை சுற்றியுள்ள எல்லைச்சுவரை இரும்பு வேலைகொண்டு மேம்படுத்தல் | 2,369,166.10 | 100% |
| கிழக்குப் பல்கலைக்கழக, திருகோணமலை வளாக சுற்றுமதில் மேம்பாடு | 1,432,339.52 | 85% |
| கிழக்குப் பல்கலைக்கழக, திருகோணமலை வளாக சுற்றுமதிலை கட்டடக்கலை வடிவமைப்பு மூலம் இரும்பு பின்னல் வேலை கொண்டு மேம்பாடுத்தல் | 733,507.94 | 70% |
| கிழக்குப் பல்கலைக்கழக, திருகோணமலை வளாக பாதசாரிகள் நடைபாதை மேம்பாடு | 649,932.60 | 25% |
| கிழக்குப் பல்கலைக்கழக, திருகோணமலை வளாக நுளைவாயில் சுற்றுச் கூழல் மேம்பாடு | 964,260.00 | 15% |
| கிழக்குப் பல்கலைக்கழக, திருகோணமலை வளாக நுளைவாயில் மேம்பாடு | 956,177.50 | ஆயத்த முற்கொடுப்பனவு பெறப்பட்டது ஆனால் இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை |

## 21. ஏதேனும் பிற விடயங்கள் / இவ்வறிக்கை தொடர்பான செயற் திறன்

### அ. 2014 இல் நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டங்கள்

| தொடர் இல. | கூட்ட இலக்கம் | திகதி |
|---|---|---|
| 01 | 29ஆவது கணக்காய்வுக் குழு | 27.01.2014 |
| 02 | 30ஆவது கணக்காய்வுக் குழு | 24.02.2014 |
| 03 | 31ஆவது கணக்காய்வுக் குழு | 24.03.2014 |
| 04 | 32ஆவது கணக்காய்வுக் குழு | 28.04.2014 |
| 05 | 33ஆவது கணக்காய்வுக் குழு | 26.05.2014 |
| 06 | 34ஆவது கணக்காய்வுக் குழு | 24.06.2014 |
| 07 | 35ஆவது கணக்காய்வுக் குழு | 22.07.2014 |
| 08 | 36ஆவது கணக்காய்வுக் குழு | 28.08.2014 |
| 09 | 37ஆவது கணக்காய்வுக் குழு | 29.09.2014 |
| 10 | 38ஆவது கணக்காய்வுக் குழு | 18.11.2014 |
| 11 | 39ஆவது கணக்காய்வுக் குழு | 12.12.2014 |

22. **இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**


විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

AUDITOR GENERAL'S DEPARTMENT


මගේ අංකය / எனது இல. / My No. } ஈஎன்/பீரீ/பீ/ஈயூஎஸ்எல்/01/14/01 ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2015 ஒக்தோபர் 06

தகுதிவாய்ந்த அதிகாரி
இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்

**இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புகளும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் காட்டப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனதுநிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு

நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு, பதவியணியினர் அபிவிருத்தி நிலையத்திலிருந்து கையேற்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள் போன்ற சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 19,411,037 மொத்தப் பெறுமதியுடைய தளபாடங்கள், உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற சொத்துக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவிய யுத்த நிலைமை காரணமாக 1990 ஆம் ஆண்டில் காணாமல் போயிருந்தன. இருப்பினும், இது தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரை கணக்குகளில் எவ்வித சீராக்கங்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பட்டதாரிக் கல்வியின் பொருத்தப்பாடு மற்றும் தர முன்னேற்ற செயற்திட்டம் (ஐஆர்கிவ்யூஈ) 2011 இல் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் செயற்திட்டத்தின் கணனிகள், தளபாடங்கள், புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அச் சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்ற, பதவிகள் வறிதாக்கப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 307 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 9,716,548 மொத்தமான கடன் மீதிகள் 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக உள்ளன. இருப்பினும், இந்த நிலுவையான மீதிகளை அறவிடுவதற்கு அல்லது குறித்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2015 யூன் 30 வரை காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 5,000,378 கூட்டுத்தொகையான முற்பணங்கள், குறித்த வழங்குனர்களிடமிருந்து அந்த முற்பணங்களை

அறவிடுவதற்கான வாய்ப்பினை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 10 ஆண்டுகளிற்கும் மேலாக 135 இறக்குமதி முற்பணக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன.

(இ) பல்வேறு வழங்குனர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 14,604,399 கூட்டுத்தொகையான முற்பணங்கள் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 05 தொடக்கம் 18 ஆண்டுகள் வரையான காலவீச்சில் அறவிடப்படாது வைக்கப்பட்டிருந்தன.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை | |
| (i) X ஆம் அத்தியாயத்தின் 20.6 ஆம் பிரிவு | கல்விசார்ந்த மற்றும் கல்விசாராத பதவியணியினரால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் பொது படிவம் 96 இல் மாதந்தோறும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XXVII ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகைகள் மற்றும் வெளிச்செல்கைகளைப் பதிவு செய்வதற்காக வருகைப் பதிவேட்டினை பேணிவருவதற்கு பல்கலைக்கழகம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. கல்விசார் பதவியணியினர் பாரம்பரியமாகவே சகல பல்கலைக்கழகங்களிலும் தமது வருகைகளைப் பதிவு செய்வதில்லையென இது தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரி அறிவித்திருந்தார். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

---

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 102 தொடக்கம் 105 வரை | (i) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமானதோர் வாகனம் விபத்தில் சிக்கியிருந்ததுடன் ரூபா 1,563,073 அந்த வாகனத்தைத் திருத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், விபத்துக்கான காரணங்கள் மற்றும் ஏற்பட்ட இழப்புக்களை மதிப்பிட்டு பொறுப்பு வாய்ந்தவர்களை இணங்காண்பதற்கான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனைகளின் படி, உபவேந்தரின் விடுதியில் 913 பதிவேட்டுப் பொருட்கள் குறைவாகக் காணப்பட்டன. இது தொடர்பில் ஏற்பட்ட இழப்புக்களை மதிப்பிட்டு பொறுப்பினைக் சாட்டுவதற்காக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

---

### 3.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 777,087,000 அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்ள முன்னர் ரூபா 863,344,968 பற்றாக்குறையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 621,470,000 மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்ள முன்னர் பற்றாக்குறை ரூபா 765,406,686 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 97,938,282 ஆன மேலுமொரு வீழ்ச்சி காட்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ஆளுக்குரிய வேதனங்கள் ரூபா 77,049,832 ஆல் அதிகரித்து இருந்தமையே இந்த வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயலாற்றல் பின்வருமாறு காணப்பட்டது.

**(அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்**

2014 இல் இடம்பெற்ற இறுதிப் பரீட்சைகள் மற்றும் சித்தியடைந்த பட்டதாரிகளின் எண்ணிக்கை விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரங்கள் | விவசாய பீடம் | கலை, கலாச்சார பீடம் | வணிக முகாமைத்துவ பீடம் | விஞ்ஞான பீடம் | சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடம் |
|---|---|---|---|---|---|
| மீளாய்வாண்டில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 38 | 289 | 165 | 19 | 36 |
| பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | 38 | 289 | 95 | 12 | 36 |
| இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதமாக பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களின் சதவீதம் | 100% | 100% | 58% | 63% | 100% |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வணிக முகாமைத்துவ பீடத்தின் வணிக முகாமைத்துவ இளமானி பட்டப் பெறுபேறுகள் மீளாய்வாண்டில் வெளியிடப்படாதிருந்ததுடன் 2015 சனவரி மாதத்திலேயே வெளியிடப்பட்டிருந்தன. அதற்கமைய, வணிக இளமானி மற்றும் வணிக முகாமைத்துவ இளமானி ஆகிய இரண்டு துறைகளிலும் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 142 ஆகவும் பீடத்தின் சித்தியடைதல் வீதம் 89 சதவீதமாகவும் காணப்பட்டன.

(ii) பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி முதலாவது தத்துவங்களிலிருந்து கோட்பாட்டு எண்ணக்கருக்களின் நிர்மாணம்/உருவாக்கம் மற்றும் அதன் பின்னர் நவீன உண்மையான உலகத்தின் நிலமையை புரிந்துகொள்ளலின் அபிவிருத்தி என்பவற்றை உள்ளடக்கிய தத்துவ விஞ்ஞானத்தின் (தூய விஞ்ஞானம்) மிக ஆழமான கற்கை காரணமாக முதலாவது எத்தனிப்பில் சித்தியடைதல் வீதம் விஞ்ஞான பீடத்தில் குறிப்பிடத்தக்களவு குறைவாகக் காணப்பட்டது.

## (ஆ) மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல்

கடந்த 03 ஆண்டுகளில் ஒவ்வொரு பீடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டங்களைப் பெற்று வெளியேறிச்சென்ற மாணவர்களின் எண்ணிக்கை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| பீடம் | பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | பட்டங்களைப் பெற்றுக்கொண்டு வெளியேறிய மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2013 | 2012 | 2014 | 2013 | 2012 |
| விவசாயம் | 118 | 83 | 65 | 22 | 27 | 18 |
| கலை மற்றும் கலாச்சாரம் | 210 | 276 | 543 | 311 | 374 | 305 |
| வணிக மற்றும் முகாமைத்துவம் | 208 | 201 | 180 | 81 | 96 | 54 |
| விஞ்ஞானம் | 192 | 214 | 151 | 34 | 57 | 27 |
| சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞானம் | 89 | 80 | 101 | 42 | 27 | - |
| மொத்தம் | 817 | 854 | 1,040 | 490 | 581 | 404 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விவசாய பீடத்திற்கு மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 42 சதவீதத்தினால் அதிகரித்திருந்த அதேவேளை கலை மற்றும் கலாச்சார பீடத்திற்கும் விஞ்ஞான பீடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 24 சதவீதத்தினாலும் 10 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

**(இ) நூலக நிர்வாகம்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 15 கல்விசார் பதவியணியனரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த ஐம்பத்தி இரண்டு (52) புத்தகங்கள் 01 முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் குறித்துரைத்த காலத்தில் மீள ஒப்படைக்கப்படாது வைத்திருக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அப் புத்தகங்களை மீளப் பெறுவதற்கு அல்லது தாமதத்திற்காக ரூபா 430,684 தண்டப்பணங்களை விதிப்பதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) வெள்ளம், கரையான் மற்றும் பூச்சிகள் காரணமாக சேதமடைந்திருந்த ரூபா 675,020 கிரயமான புத்தகங்கள் கணக்குகளிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

### 4.2.1 மாணவர் விடுதிகளுக்காக மரத்தினாலான அடுக்குக் கட்டில்கள் மற்றும் கற்கை மேசைகளைக் கொள்வனவு செய்தல்

600 அடுக்குக் கட்டில்களையும் 400 மரத்தினாலான கற்றல் மேசைகளையும் வழங்குவதற்குரிய ரூபா 44,559,000 பெறுமதியான ஒப்பந்தம் 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி அக்கரைப்பற்றிலுள்ள தனியார் வழங்குனர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த உடன்படிக்கையின் பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகளின் 26 ஆவது நிபந்தனையின் படி, 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதிக்கு முன்னர் ரூபா 4,455,000 பெறுமதியான செயலாற்றல் பிணை சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், வேண்டப்பட்டவாறு ஒப்பந்தக்காரர் செயலாற்றல் பிணையை சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) பல்கலைக்கழகத்திடமிருந்து கொள்வனவுக் கட்டளையைப் பெற்றுக்கொள்ளாது 2014 ஒக்தோபர் 10 முதல் 2014 நவம்பர் 03 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் ரூபா 11,632,500 பெறுமதியான 200 அடுக்குக் கட்டிடல்களையும் 25 கற்றல் மேசைகளையும் வழங்குனர் வழங்கியிருந்தார். இருப்பினும், சகல பொருட்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னரே குறித்த வழங்குனருக்கு பல்கலைக்கழகம் கொள்வனவுக் கட்டளையை வழங்கியிருந்தது.

### 4.2.2 மாணவர் விடுதிகளுக்காக குத்தகை அடிப்படையில் கட்டிடத்தை கொள்வனவு செய்தல்

(அ) 250 மாணவிகளிற்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக மட்டக்களப்பு, தன்னாமுனை, புனித ஜோசப் பெண்கள் இல்லத்தின் கட்டிடமொன்றை பல்கலைக்கழகம் குத்தகை அடிப்படையில் எடுத்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விலை மதிப்புத் திணைக்களத்தின் மாவட்ட விலைமதிப்பீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மதிப்பு அறிக்கையின் படி, இக் கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 170,000 ஆகும். இருப்பினும், மாவட்ட விலைமதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டை கருத்திற்கொள்ளாது பல்கலைக்கழகம் மாத வாடகையாக ரூபா 400,000 இனை செலுத்தியிருந்தது. அதன் விளைவாக, ரூபா 1,150,000 தொகை கட்டிட உரிமையாளருக்கு வாடகையாக மீளாய்வாண்டில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2006 – கொள்வனவு வழிகாட்டல்களின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மாணவர் விடுதியாக பயன்படுத்துவதற்கு பொருத்தமானதும் குறைந்த கிரயம் கொண்டதுமான கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழகம் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றியிருக்கவில்லை.

(ஆ) 65 மாணவிகளுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக மட்டக்களப்பு, புலியடிக்குடாவில் மேலுமொரு கட்டிடம் ரூபா 130,000 மாதாந்த வாடகையில் 2014 மே 01 ஆந் திகதியிலிருந்து பல்கலைக்கழகம் பெற்றுக்கொண்டிருந்தது. இருப்பினும், விலை மதிப்புத் திணைக்களத்தின் மாவட்ட விலைமதிப்பீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மதிப்பு அறிக்கையின் படி, இக் கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 82,500 ஆகும். ஆகையால், ரூபா 570,000 தொகை கட்டிட உரிமையாளருக்கு வாடகையாக மீளாய்வாண்டில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது

### 4.2.3 உப வேந்தரின் விடுதிக்கு மின் பிறப்பாக்கியொன்றை கொள்வனவு செய்தல்

உப வேந்தரின் விடுதியில் பயன்படுத்துவதற்காக பல்கலைக்கழகம் ரூபா 1,675,610 தொகைக்கு தனியார் கம்பனியொன்றிடமிருந்து மின் பிறப்பாக்கியொன்றை கொள்வனவு செய்திருந்தது. உத்தரவாத காலத்தில் எவ்வித கட்டணமுமின்றி சேவையினை வழங்குவதற்கு வழங்குனர் இணக்கம் தெரிவித்திருந்தார். இருப்பினும், பல்கலைக்கழகம் இச் சேவையிலிருந்து பயன்பெறாதிருந்ததுடன் அதன் காரணமாக மின் பிறப்பாக்கியினை

முறையாக பராமரிக்காமையால் உத்தரவாதக் காலத்தில் 2 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக மின் பிறப்பாக்கி செயலிழந்து காணப்பட்டது.

### 4.2.4 நிலத்தை சீர்படுத்தி பல்கலைக்கழக வளவில் மரங்களை நடுதல்

முன்னாள் சனாதிபதியின் வருகை மற்றும் விஞ்ஞான பீடத்தின் கட்டிடத் தொகுதியினை திறந்து வைத்தல் வைபவத்திற்காக விஞ்ஞான பீடத்தின் கட்டிடத் தொகுதியின் பிரதான நுழைவாசலில் நிலத்தை சீர்படுத்தி மரங்களை நடுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,752,740 தொகையினை பல்கலைக்கழகம் செலவிட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டல்கள் - 2006 இன் 2:14:1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் திறந்த போட்டி கேள்விகோரலை பின்பற்றாது உயர் கல்வி அமைச்சின் இருபத்தி ஓராம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி (எச்ஈரீசீ) செயற்திட்டத்தின் மதியுரைஞரால் பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தகாரரை இந் நேக்கத்திற்காக பல்கலைக்கழகம் தெரிவுசெய்திருந்தது.

(ஆ) ஒப்பந்தகாரர் தொடர்புடைய வேலைகளை 2014 ஏப்ரல் 18 ஆந் திகதி ஆரம்பித்திருந்த போதிலும், வேலைகள் முடிவடைந்த பின்னர் 2014 யூலை 01 ஆந் திகதியன்றே திணைக்கள கொள்வனவுக் குழு (டீபிசீ) குறித்த ஒப்பந்தகாரரை தெரிவுசெய்திருந்தது.

(இ) சந்தையில் அவ்வாறான மரங்களுக்கு நிலவுகின்ற விலைகளைக் கருத்திற்கொள்ளாது அல்லது ஏனைய ஒத்த வழங்குனர்களிடமிருந்து விலைகளைப் பெற்றுக்கொள்ளாது ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் ரூபா 1,752,790 தொகை ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 4.2.5 உப வேந்தரின் விடுதிக்கு வீட்டுப்பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்தல்

ரூபா 1,447,873 பெறுமதியான சாப்பாட்டு மேசை, படுக்கையறை பொருட்தொகுதி, தேகப்பயிற்சி உபகரணங்கள், வரவேற்பறை இருக்கை, கட்டில்கள் மற்றும் நாற்காலிகள் போன்ற வீட்டுத் தளபாடங்கள் 2013 மார்ச் 12 ஆந் திகதி ஒப்பந்தகாரர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.
கொள்வனவு வழிகாட்டல்கள் - 2006 இன் 2:14:1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு நடைமுறையினைப் பின்பற்றாது மேற்படி பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2013 மார்ச் 12 ஆந் திகதி மொறட்டுவையிலுள்ள வழங்குனர் ஒருவரிடமிருந்து பல்வேறு

திருத்தங்களுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட செல்லுபடியற்ற துண்டுப்பிரசுரமாக காணப்பட்ட கூறுவிலை உப வேந்தரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும், வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக 10 சதவீத எல்லையொன்றை செலுத்தியமையால் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 131,625 இழப்பு ஏற்பட்டிருந்தது.

## 4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் செயற்திறனின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 யூன் 24 ஆந் திகதி இடம்பெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் பிரகாரம், 155 கணனிகள் மற்றும் 06 யூபிஎஸ் கொள்வனவு தொடர்பில் ஏற்பட்ட ரூபா 4,233,370 நட்டத்தை பல்கலைக்கழகத்தின் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த நட்டம் 2015 யூன் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைக்காக விசாரணை உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் பரிந்துரைகளை மீளாய்வு செய்வதற்காகவும் ஆய்வு செய்வதற்காகவும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இது தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரி எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) 2012 யூன் 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி, பல்கலைக்கழகம், திருகோணமலை வளாகம் மற்றும் சுவாமி விபுலானந்தா அறநெறிக் கற்கைகள் நிறுவனம் என்பவற்றின் பிரதான திட்டத்தினை தயாரிப்பதற்கான மதியுரை வேலைகள் 2012 ஏப்ரல் 16 இலிருந்து 03 மாதத்திற்குள் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், வேலைகள் 2015 யூன் 30 ஆந் திகதி வரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) புலமைப்பரிசில்கள் பெற்று வெளிநாடுகளிற்குச் சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் எழுபத்தி நான்கு (74) விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்கள் முடிவடைந்த பின்னர் கடமைக்கு சமூகமளித்திருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியிருந்தனர். இருப்பினும், உடன்படிக்கையினை முறித்துக்கொண்டமைக்காக 74 விரிவுரையாளரிடமிருந்து ரூபா 160,937,945 தொகையினை அறவிடுவதற்கு 2015 யூன் 30 வரையிலும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 74 பிணைமுறி மீறல்களில் 12 விடயங்கள் அவர்களிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் முறித்துக் கொண்டோர்களிடமிருந்து நிலுவைகளை அறவிடுவதற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ளதாக இது தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரி எனக்கு அறிவித்திருந்தார்.

(ஈ) வெளிநாட்டு புலமைப்பரிசில்களிற்கு விடுமுறைகளை வழங்குவதற்கு முன்னர் விரிவுரையாளர்களிடமிருந்து முற்பணங்களை அறவிடுதல் வேண்டும். எவ்வாறாயினும், உடன்படிக்கைகளை முறித்துக்கொண்ட 05 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 204,551 கூட்டுத்தொகையான நிலுவை முற்பணங்களை அறவிடாது அவர்களிற்கு புலமைப்பரிசில் விடுமுறைகளை பல்கலைக்கழகம் வழங்கியிருந்தது.

(உ) 1978 இன் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 72(1) ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 21.1.1 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம், சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II இற்கு பதவி உயர்த்தப்படுவதற்காக விரிவுரையாளர் ஒருவர், விரிவுரையாளர் பதிவியில் (தகுதிகாண்) 08 ஆண்டுகளினுள் பட்டப்பின் படிப்பு பட்டத்தினை பூரணப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், குறித்துரைத்த காலப்பகுதியில் பட்டப்பின் படிப்பு பட்டங்களை பூர்த்திசெய்திருக்காத பதினேழு விரிவுரையாளர்களை தற்காலிக விரிவுரையாளர்கள் பதவியில் மீண்டும் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II இற்கு பதவி உயர்த்தப்பட்டிருந்தனர்.

(ஊ) பல்கலைக்கழகத்தின் பழமையான விருந்தினர் விடுதிக் கட்டிடம் மீளாய்வாண்டில் ரூபா 13,399,453 செலவில் புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத்திலிருந்து கழற்றப்பட்ட மின்விசிறிகள், மின்குமிழ்கள், மின்பிறப்பாக்கி மற்றும் மின் ஆழிகள் 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பல்கலைக்கழகத்தின் மின்னியலாளரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இப் பொருட்களை உப வேந்தரின் விடுதியில் பராமரிக்கப்படுகின்ற இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) முன்னாள் உப வேந்தர் 2015 மார்ச் 05 முதல் அமுலுக்கு வரும் வகையில் பல்கலைக்கழகத்திலிருந்து சென்றிருந்தார். இருப்பினும், அவரிடமிருந்து ரூபா 45,182 கடன் மீதியினை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.4 மனித வள முகாமைத்துவம்

பல்கலைக்கழகத்தின் ஐந்து பீடங்களிற்கான பேராசிரியர்கள் உள்ளடங்கலாக பிரதான கல்விசார் பதவிகளில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும், கல்விசார் பதவியணியிலுள்ள 64 வெற்றிடங்களில் 41 வெற்றிடங்கள் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் பதிவிகளில் காணப்படுகின்றன. இருப்பினும், இந்த

வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2015 யூன் 30 வரையிலும் பல்கலைக்கழம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

“மென்படல செயலிகளின் எட்டு துணைப்பாகங்கள்” என அழைக்கப்படும் மருத்துவ உபகரணம் 2012 ஆம் ஆண்டில் ரூபா 4.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மென்படல செயலிகளின் பிரதான பாகத்தை கொள்வனவு செய்வதற்குத் தவறியமையால் கொள்வனவு செய்யப்பட்ட திகிதியிலிருந்து இந்த உபகரணம் சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 16 ஆந் திகதியன்றே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

வினைத்திறன் மற்றும் பயனுள்ள வகையில் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக நிரந்தர மற்றும் அனுபவமுள்ள பதவியணியினர் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

கொள்வனவு வழிகாட்டல்கள் 4.2.1(அ) மற்றும் 4.2.3 இன் பிரகாரம் குறைந்தது மூன்று ஆண்டு காலத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டப்படுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) கடன்கள் மற்றும் முற்பணங்களை அறவிடுதல்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) மனித வளங்கள் முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ. பி. சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**23. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2)ஆம் பிரிவு மற்றும் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு**

| | கணக்காய்வுப் பத்தியின் குறிப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **2.2** | **நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்** | |
| **2:2:1** | **கணக்கீட்டு குறைபாடுகள்** | |
| | பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன | |
| (அ) | 2011 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு, பதவியணியினர் அபிவிருத்தி நிலையத்திலிருந்து கையேற்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள் போன்ற சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>மேற்படி சொத்துக்கள் தற்போது மறுமதிப்பீடு செய்யப்பட்டு கணக்குப் புத்தகங்களில் முதலாக்கம் செய்யப்பட்டுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிலையானசொத்துப் பேரேடு தயாரிக்கப்பட்டுவிட்டதால், இதன் பெறுமதியானது 31.12.2015இல் நடைமுறைச் சொத்தல்லாத கணக்கில் வெளிப்படுத்தப்படும். |
| (ஆ) | ரூபா 19,411,037 மொத்தப் பெறுமதியுடைய தளபாடங்கள், உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற சொத்துக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவிய யுத்த நிலைமை காரணமாக 1990ஆம் ஆண்டில் காணாமல் போயிருந்தன. இருப்பினும், இது தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதிவரை கணக்குகளில் எவ்வித சீராக்கங்களும் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை<br><br>இழப்பின் மதிப்பானது ரூபா 19,411,037.00 ஆகும். இதற்கான ஒப்புதல் திறைசேரியின் செயலாளரிடமிருந்து தற்போதுவரை கிடைக்கப்பெறவில்லையாதலால் கணக்குப் பதிவேட்டில் எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை. நிதிப் பிரிவு 102 இன் படி திறைசேரி செயலாளரிடமிருந்து ரூபா 19,411,037.00 இழப்பை பதிவழிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி கிடைத்ததும் கணக்குப் புத்தகங்களில் சீராக்கம் செய்யப்படும். |
| (இ) | பட்டதாரிக் கல்வியின் பொருத்தப்பாடு மற்றும் தர முன்னேற்ற செயற்றிட்டம் (ஐஆர்கிவ்யூஈ) 2011இல் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் செயற்திட்டத்தின் கணனிகள், தளபாடங்கள், புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அச் சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் 15.09.2010 திகதிய கடிதத்தின்படி கிழக்குப் பல்கலைக்கழக பட்டப்படிப்பு கல்வியின் பொருத்தப்பாடு மற்றும் தர முன்னேற்ற செயற்திட்டத்தின் (IRQUE) கீழ் கொள்வனவு செய்யப்பட்ட எல்லா சொத்துக்களும் அதன் உள்ளக தொழில்நுட்ப செயலகத்தினால் (LTS) குறிக்கப்பட்ட திணைக்களங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் குறிக்கப்பட்ட சொத்துக்கள் தற்போது மிள்பெறுமானம் இடப்பட்டு முதலாக்கப்பட்டதுடன், இச் சொத்தின் பெறுமதிகள் 31.12.2015 அன்று நடைமுறைச் சொத்தல்லாத கூற்றின் கீழ் வெளிப்படுத்தப்படும். |

<table>
<tr><td colspan="3">2.2.2 பெறவேண்டிய கணக்குகள்</td></tr>
<tr><td colspan="3">பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன</td></tr>
<tr><td>(அ)</td><td>பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்ற, பதவிகள் வறிதாக்கப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 307 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 9,716,548 மொத்தமான கடன் மீதிகள் 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக உள்ளன. இருப்பினும், இந்த நிலுவையான மீதிகளை அறவிடுவதற்கு அல்லது குறித்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக சட்டரீதியான நவடிக்கைகளை எடுப்பதற்கு 2015 யூன் 30 வரை காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.</td><td>ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>நிலுவைக் கடன் மிகுதியை மீளப் பெறுவதற்கு பின்வரும் நடவடிக்கை எடுக்கப்பபடவுள்ளது:<br><br>ஓய்வுபெற்றோர்:<br><br>சட்ட நடவடிக்கை/பல்கலைக்கழக சேமலாப நிதியினூடாகவும்,<br><br>சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டோர்:<br><br>அவர்களின் பிணையாளிகள் அல்லது அவர்களது பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்தும்,<br><br>இடமாமாற்றம்பெற்ற உத்தியோகத்தர்:<br><br>தனித்தனியான கோரிக்கைக் கடிதங்கள் மூலம் அல்லது அவர்கள் இடமாறிய நிறுவனங்களுக்கு முறையான கடிதங்கள் அனுப்புவதனூடாகவும்.</td></tr>
<tr><td>(ஆ)</td><td>வெளிநாட்டு வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 5,000,378 கூட்டுத்தொகையான முற்பணங்கள், குறித்த அறவிடுவதற்கான வாய்ப்பினை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 10 ஆண்டுகளிற்கும் மேலாக 135 இறக்குமதி முற்பணக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன.</td><td rowspan="2">ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>அனேகமான விற்பனையாளர்களுக்கு முற்பணங்கள் 1990ஆம் ஆண்டிற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தன. அக்காலப் பகுதியில் நிலவிய அசாதாரன சூழ்நிலைகளால், மேற்படி பொருட்களுக்கான கொடுப்பனவுகளை கொழும்பைத் தளமாகக் கொண்ட வழங்குனர்களுக்கு அவ்விடத்திலேயே வழங்கப்பட வேண்டியிருந்தது.<br><br>ஆகவே மேற்படி கொள்வனவுக்கான கொடுப்பனவுகள் முற்பண முறைப்படி சீர்செய்யப்படும் பொருட்டு முற்பன முறைப்படி அவர்களுக்கு காசோலை மூலம் வழங்கப்பட்டது. ஆயினும் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னும் இவ் முற்பணக் கொடுப்பனவுகள் சீர்செய்யப்படவில்லை.<br><br>இது எம்மால் மேற்கொள்ளப்பட்ட தவறு என்பதுடன், இது சரிசெய்யப்படும்.</td></tr>
<tr><td>(இ)</td><td>பல்வேறு வழங்குனர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 14,604,399 கூட்டுத்தொகையான முற்பணங்கள் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 05 தொடக்கம் 18ஆண்டுகள் வரையான காலவீச்சில் அறவிடப்படாது வைக்கப்பட்டிருந்தன.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **2:3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்** | | | |
| கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | | | |
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள்** | | | **இணக்கமின்மை** |
| (அ) | பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை | | |
| (i) | X ஆம் அத்தியாயத்தின் 20.6ஆம் பிரிவு | கல்விசார்ந்த மற்றும் கல்விசாராத பதவியணியினரால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் பொது படிவம் 96இல் மாதந்தோறும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்-பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>பிரமாணங்களுக்கு அமைவாக எதிர்காலத்தில் சம்பளமற்ற விடுமுறைகள் தொடர்பான சகல விபரங்களையும் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு அறிக்கைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | XXVII ஆம் அத்தியாயத்தின் 3.1ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகைகள் மற்றும் வெளிச்செல்கைகளைப் பதிவு செய்வதற்காக வருகைப் பதிவேட்டினை பேணிவருவதற்கு பல்கலைக்கழகம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. கல்விசார் பதவியணியினர் பாரம்பரியமாகவே சகல பல்கலைக்கழகங்களிலும் தமது வருகைகளைப் பதிவு செய்வதில்லையென இது தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரி அறிவித்திருந்தார். | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>வழமையாக பல்கலைக்கழகங்களில் கல்விசார் பதவியணியினர் தங்கள் வரவுகளை பதிவதில்லை |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) | 102 தொடக்கம் 105 வரை | பல்கலைக்கிகத்திற்குச் சொந்தமானதோர் வாகனம் விபத்தில் சிக்கியிருந்ததுடன் ரூபா 1,563,073 அந்த வாகனத்தைத் திருத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், விபத்துக்கான காரணங்கள் மற்றும் ஏற்பட்ட இழப்புக்களை மதிப்பிட்டு பொறுப்பு வாய்ந்தவர்களை இணங்கான்பதற்கான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதற்காக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது, பொலீசாரின் அறிக்கையில் சாரதி குற்றவாளியாக கருதப்படாததால் அவ்விசாரணை நடைபெறவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ii) | | மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனைகளின் படி, உபவேந்தரின் விடுதியில் 913 பதிவேட்டுப் பொருட்கள் குறைவாகக் காணப்பட்டன. இது தொடர்பில் ஏற்பட்ட இழப்புக்களை மதிப்பிட்டு பொறுப்பினைக் காட்டுவதற்காக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>உபவேந்தர் அவர்களின் விடுதியில் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டதால் அநேகமான பொருட்கள் உபவேந்தரின் வாடகை வீட்டுக்கு மாற்றப்பட்டன மேலும் அக்காலப்பகுதிக்கான வருடாந்த பௌதீக மெய்மையாய்வு நடைபெறவில்லை. திருத்தவேலையின் பின்னர், உபவேந்தரின் விடுதி புதிய பொருள்களைக் கொண்டு மாற்றீடு செய்யப்பட்டு ஏனைய பொருட்கள் கொழும்பு மற்றும் மட்டக்களப்பு விருந்தினர் விடுதிகளுக்கு மாற்றப்பட்டன. அங்கே சாதாரண பயன்பாட்டுப் பொருட்களான நுளம்பு வலைகள், துவாய், கட்டில் விரிப்புக்கள், தலையனை உறைகள், கண்ணாடிக்குவளைகள், உணவுத் தட்டுக்கள் போன்றவை 913 காணமல்போன பொருள் பட்டியலில் காணப்படுகிறன. இவை பாவனைக்கு உதவாததாகக்கருதி ஓரிடத்திலே வைக்கப்பட்டுள்ளதுடன், வருடாந்த பொதீக மெய்மையாய்வுக் குழுவின் பரிந்துரைக்கமைய இருப்பிலிருந்து அகற்றப்படும். பொருட் பதிவேடானது செம்மைப்படுத்தப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இது செம்மைப்படுத்தப்பட்டு, குறித்த குறைபாடானது சீர்ப்படுத்தப்படும். |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

| | |
|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 777,087,000 அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்ள முன்னர் ரூபா 863,344,968 பற்றாக்குறையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 621,470,000 மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்ள முன்னர் பற்றாக்குறை ரூபா 765,406,686 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 97,938,282 ஆன மேலுமொரு வீழ்ச்சி காட்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ஆளுக்குரிய வேதனங்கள் ரூபா 77,049,832 ஆல் அதிகரித்து இருந்தமையே இந்த வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தது. | குறிக்கப்பட்டது<br><br>இந்த மாற்றத்திற்கான காரணம் செலவீனமானது பாதீட்டு ஒதுக்கத்திற்கு மேலதிகமாக செலவிடப்பட்டதாகும், காரணம்;<br><br>1. விஷேட படிகள் மீதான அதிகரிப்பு மற்றும் 20% மேலதிக விசேட படிகள்.<br>2. புதிய மாணவர் விடுதி மற்றும் பீடங்களின் கட்டுமானத்தினால் ஏற்பட்ட மின்கட்டண அதிகரிப்பு<br>3. காசல்லாத சொத்துக்களான பெறுமானத் தேய்வு மற்றும் முதலீட்டுத் தள்ளுபடி மீதான அதிகரிப்பு மற்றும் கடன்தீர் நிதி திரட்டல் மதிப்புக்கள் மீதான நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

**மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயலாற்றல் பின்வருமாறு காணப்பட்டது**

| | | |
|---|---|---|
| (அ) | பரீட்சைப் பெறுபேறுகள் | குறிக்கப்பட்டது |
| (ஆ) | மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் | |
| (இ) | **நூலக நிர்வாகம்**<br>இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன | |
| (i) | 15 கல்விசார் பதவிணியினரால் எடுத்துச் செல்லப்படிருந்த ஐம்பத்து இரண்டு (52) புத்தகங்கள் 01 முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் குறித்துரைத்த காலத்தில் மீள ஒப்படைக்கப்படாது வைத்திருக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அப்புத்தகங்களை மீளப் பெறுவதற்கு அல்லது தாமதத்திற்காக ரூபா 430,684 தண்டப்பணங்களை விதிப்பதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>15 கல்விசார் பதவிணியினரில் இருவர் புத்தகங்களை திரும்ப ஒப்படைத்து விட்டார்கள்.<br>இரவல் பெற்ற புத்தகங்களை மீளப்பெற ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சேவையில் உள்ளோரிடம் மூதவையின் அங்கிகாரத்துடன் தண்டப்பணம் அறவிடவும் ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தை விட்டு வளியேரியோரிடம் தண்டப்பணத்துடன் புத்தகத்தின் பெறுமதியை அவர்கள் பல்கலைக்கழக சேமலாப நிதிக்காக விண்ணப்பிக்கும் போது மீளப்பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | வெள்ளம், கறையான் மற்றும் பூச்சிகள் காரணமாக சேதமடைந்திருந்த 675,020 கிரயமான புத்தகங்கள் கணக்குகளிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>கணக்குப் பதிவுகளிலிருந்து இப் புத்தகங்களைக் கழிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டது<br>• புத்தகங்களின் பெறுமதியினை பதிவளிப்பதற்கான சிபார்சுகளைச் செய்யவென நூலக குழுவினால் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது.<br>• உபகுழுவானது இவற்றை பதிவழிப்பதற்கான சிபார்சினைச் செய்தது.<br>• நிதிக்குழுவின் சிபார்சு குறிப்பு பத்திரம் மூலம் பேரவையின் அங்கிகாரத்திற்கு பதிவழிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.<br>• நிதிக் குழுவானது 04.06.2016 அன்று நடைபெற்ற தனது 52ஆவது கூட்டத்தில் பௌதீக இருப்பு மெய்மை ஆய்வின் போது சரியான நடைமுறை கடைப்பிடிக்கப்படாததால் இக் குறிப்புப் பத்திரத்தை சிபார்சு செய்யவில்லை. மேலும் இது தொடர்பான குறைபாடுகள் தீர்க்கப்பட்டு சிபார்சுக்காக புதிதாக ஒரு குறிப்புப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கும்படி நுலகர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.<br><br>நிதிக்குழுவின் பரிந்துரையைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

<table>
<tr><td colspan="3">4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்<br>4.2.1 மாணவர் விடுதிகளுக்காக மரத்தினாலான அடுக்குக் கட்டில்கள் மற்றும் கற்கை மேசைகளைக் கொள்வனவு செய்தல்</td></tr>
<tr><td colspan="2">600 அடுக்குக் கட்டில்களையும் 400 மரத்தினாலான கற்கை மேசைகளையும் வழங்குவதற்குரிய ரூபா 44,559,000 பெறுமதியான ஒப்பந்தம் 2014 ஆகஸ்ட் 15ஆந் திகதி அக்கரைப்பற்றிலுள்ள தனியார் வழங்குனர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.</td><td rowspan="2">ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>பல்கலைக்கழகமானது மேற்கூறப்பட்ட தளபாடங்களை இயன்றவரை விரைவாக கொள்வனவு செய்வதற்கு உத்தேசித்தமைக்கான காரணம்;<br><br>• இவ் மீளாய்வாண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எண்ணிக்கை இருமடங்கிலும் அதிகமாக மாணவர்களின் தொகை அதிகரிக்கப்பட்டதால், அவர்களுக்கு வழங்குவதற்கு எமக்கு மேலதிகமாக தளபாடங்கள் தேவைப்பட்டது.<br>• உயர்கல்வி அமைச்சினால் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் புதிய விடுதிகளை விரைவாகப் பூர்த்தி செய்வதுடன் விடுதிகள் முழுமையாக தாளபாடமிடப்பட்டு முடிந்தவரை விரைவாக பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று உயர்கல்வி அமைச்சு வலியுறுத்தியது.<br>• அடுத்த தொகுதி மாணவர்களும் அனுமதிக்கு ஆயத்தமாக இருப்பதனால் மேற்படி மாணவர்களுக்கான கல்வியாண்டை உடனடியாக ஆரம்பிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது.<br><br>இதனால் மேற்படி வழங்குநரிடமிருந்து தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக கொள்முதல் நடவடிக்கைகளை ஆரம்பித்து, செயலாற்றல் பிணையை 25.08.2014 இற்கு முன்னர் ஒப்படைக்கும்படி அவர் கேட்கப்பட்டிருந்தார். எனினும் மேற்படி வழங்குனர் அதனை ஒப்படைக்கத் தவறியதுடன் கொள்வனவுக் கட்டளைகள் எதுவுமின்றி 2014ஆம் ஆண்டு புரட்டாதி முதல் வாரத்திலிருந்து பொருட்களை வழங்கத் தொடங்கினார். கிழக்குப் பல்கலைக்கழகமானது மாணவர்களின் நெருக்கடிகளைச் தவிர்ப்பதற்காக பொருட்களை கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்ததுடன், வழங்குனர் செயலாற்றல் பிணையை உடன் கைளிக்கும்படி வலியுறுத்தப்பட்டார். செயலாற்றல் பிணையின் பெறுமதிக்கும் மேலதிகமாக தளபாடங்களை வழங்கியதாக வழங்குனர் அறிவித்தார்.<br><br>எனவே நாம் செயலாற்றல் பிணையின் பெறுமதிக்கு மேலான பகுதிக் கொடுப்பனவை நிறுத்திவைப்பதற்கு தூண்டப்பட்டோம். ஆனாலும் நாம் இதுவரை முழுமையான கொடுப்பனவை கொடுக்கவில்லை என்பதுடன் இதனால் பல்கலைக்கழகத்திற்கு எவ்வித இழப்புக்களும் ஏற்படவில்லை.</td></tr>
<tr><td>(i)</td><td>ஒப்பந்த உடன்படிக்கையின் பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனையின் 26 ஆவது நிபந்தனைகளின் படி, 2014 ஆகஸ்ட் 25ஆந் திகதிக்கு முன்னர் ரூபா 4,455,000 பெறுமதியான செயலாற்றல் பிணை சமர்ப்பிக்கப்பட்டிருதல் வேண்டும். இருப்பினும், வேண்டப்பட்டவாறு ஒப்பந்தக்காரர் செயலாற்றல் பிணையை சமர்ப்பித்திருக்கவில்லை</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| (ii) | | பல்கலைக்கழகத்திடமிருந்து கொள்வனவுக் கட்டளையைப் பெற்றுக்கொள்ளாது 2014 ஒக்டோபர் 10 முதல் 2014 நவம்பர் 03ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் ரூபா 11,632,500 பெறுமதியான 200 அடுக்குக் கட்டில்களையும் 25 கற்றல் மேசைகளையும் வழங்குனர் வழங்கியிருந்தார். இருப்பினும் சகல பொருட்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னரே குறித்த, வழங்குனருக்கு பல்கலைக்கழகம் கொள்வனவுக் கட்டளையை வழங்கியிருந்தது. | பகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>கொள்வனவுக் கட்டளைகள் எதுவுமின்றி வழங்குனர் 2014ஆம் ஆண்டு புரட்டாதி முதல் வாரத்திலிருந்து பொருட்களை வழங்கத் தொடங்கினார்.<br><br>பல்கலைக்கழகமானது ஏறக்குறை 30%மான பொருட்களைப் பெற்றதன் பின் 03.11.2014 அன்றே கொள்வனவுக் கட்டளைகளை வழங்கியிருந்தது. |
| **4.2.2 மாணவர் விடுதிகளுக்காக குத்தகை அடிப்படையில் கட்டிடத்தை கொள்வனவு செய்தல்** | | | |
| (அ) | | 250 மாணவிகளிற்கு விடுதி வசதிகளை வழங்குவதங்காக மட்டக்களப்பு, தன்னாமுனை புனித ஜோசப் பெண்கள் இல்லத்தில் கட்டிடமொன்று பல்கலைக்கழகம் குத்தகை அடிப்படையில் எடுத்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>மட்டக்களப்பு மறை மாவட்டத்திற்குச் சொந்தமான கட்டடமான புனித ஜோசப் பொண்கள் விடுதியானது 250 மாணவர்களுக்கு தங்குமிட வசதியை ஏற்படுத்துவதற்காக வாடகைக்கு பெறப்பட்டது. இவ்வளவு அதிகமான மாணவர்களுக்கு ஒரேதடவையில் தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு இப்பகுதியில் வேறு இடங்கள் இல்லை. மாவட்ட மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டாளரின் மதிப்பீடு, ஆயர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன், இத் தொகைக்கு அவர் உடன்படவில்லை. இது தொடர்பாக மூதவைக்கு அறிவிக்கப்பட்டு பேரவையானது அப்பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட வர்த்தக மதிப்பீட்டை பிரதேச செயலாளரின் சாண்றுடன் பெறுவதற்கு ஆலோசனை கூறியிருந்தது. பிரதேச செயலாளரின் சாண்றின்படி ஒருவருக்கான வர்த்தக மதிப்பீடான 2000 ரூபாவை மூதவை 29.05.2015 இல் நடைபெற்ற 253ஆவது கூட்டத்தில் அங்கிகரித்தது.<br><br>ஆனால் நாம் வர்த்தக மதிப்பீடான (ரூபா 2,000x250 ) ரூபா 500,000.00 இற்குப்பதிலாக குறைந்த மாத வாடகையாக ரூபா 400,000.00 வையே செலுத்தியிருந்தோம். |
| | (i) | விலை மதிப்புத் திணைக்களத்தின் மாவட்ட விலைமதிப்பீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மதிப்பு அறிக்கையின்படி, இக் கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 170,000 ஆகும். இருப்பினும், மாவட்ட விலைமதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டைக் கருத்திற்கொள்ளாது பல்கலைக்கழகம் மாத வாடகையாக ரூபா 400,000 இனை வெலுத்தியிருந்தது. இதன் விளைவாக, ரூபா 1,150,000 தொகை கட்டிட உரிமையாளருக்கு வாடகையாக மிளாய்வாண்டில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | |
| | (ii) | 2006 – கொள்வனவு வழிகாட்டல்களின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மாணவர் விடுதியாக பயன்படுத்துவதற்கு பொருத்தமானதும் குறைந்த கிரயம் கொண்டதுமான கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழகம் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றியிருக்கவில்லை | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>பின்வரும் காரணங்களால் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படவில்லை<br>1. குறித்த மீளாய்வாண்டு காலத்தகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாணவர்களின் எண்ணிக்கையை இரு மடங்கிற்கு அதிகமாக அதிகரித்தது.<br>2. உயர்கல்வி அமைச்சினால் புதிதாக கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் மேற்படி மாணவர்களுக்கான விடுதிகளில் தங்குமிட வசதியை வழங்குவதற்கு பல்கலைக்கழகமானது திட்டமிட்டிருந்தது. எனினும் இது குறிக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தியாக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| | | 3. அடுத்த தொகுதி மாணவர்கள் அனுமதிக்கு தயாராக இருந்நதால், மேற்படி மாணவர்களுக்கான கல்வியாண்டை உடனடியாக ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழகமானது முடிவெடுத்திருந்தது. |
| (ஆ) | 65 மாணவிகளுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக மட்டக்களப்பு, புளியடிக்குடாவில் மேலுமொரு கட்டிடம் ரூபா 130,000 மாதாந்த வாடகையில் 2014 மே 01 ஆந் திகதியிலிருந்து பல்கலைக்கழகம் பெற்றுக்கொண்டிருந்தது. இருப்பினும் விலைமதிப்புத் திணைக்களத்தின் மாவட்ட விலைமதிப்பீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மதிப்பு அறிக்கையின்படி, இக் கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 82,500 ஆகும். ஆகையால், ரூபா 570,000 தொகை கட்டிட உரிமையாளருக்கு வாடகையாக மீளாய்வாண்டில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்குச் சொந்தமான மட்டக்களப்பு புளியடிக்குடாவில் அமைந்துள்ள புனித செபஸ்தியன் விடுதியானது 60 மாணவர்களுக்கான தங்குமிட வசதியை வழங்கும் பொருட்டு வாடகைக்குப் பெறப்பட்டது. இவ்வளவு அதிகளவான மாணவர்களுக்குத் தங்குமிட வசதியை வழங்குவதற்கு வேறு இடங்கள் இங்கில்லை. இக் கட்டிடத்திற்காக, மாவட்ட மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டாளரின் மதிப்பீடு, அதன் உரிமையாளரான ஆயர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன், இத் தொகைக்கு அவர் உடன்படவில்லை.<br><br>இதனால் கொள்வனவு குழுவின் முன் இவ்விடயம் முன்வைக்கப்பட்டு மேலதிகமாக ரூபா 47,000.00 வாடகையாக வழங்குவதற்கு பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு அனுமதிக்கப்பட்டது<br>• உரிமையாளரினால் வழங்கப்படும் தளபாட வசதி<br>• கிடைக்கக் கூடிய கூடைப்பந்தாட்ட மைதான வசதி மற்றும்<br>• கற்கை மண்டப வசதி |
| **4.2.3 உப வேந்தரின் விடுதிக்கு மின் பிறப்பாக்கியொன்றை கொள்வனவு செய்தல்** | | |
| | உப வேந்தரின் விடுதியில் பயன்படுத்துவதற்காக பல்கலைக்கழகம் ரூபா 1,675,610 தொகைக்கு தனியார் கம்பனியொன்றிடமிருந்து மின் பிறப்பாக்கியொன்றை கொள்வனவு செய்திருந்தது. உத்தரவாத காலத்தில் எவ்வித கட்டணமுமின்றி சேவையினை வழங்குவதற்கு வழங்குனர் இணக்கம் தெரிவித்திருந்தார். இருப்பினும் பல்கலைக்கழகம் இச்சேவையிலிருந்து பயன்பெறாதிருந்ததுடன் அதன் காரணமாக மின் பிறப்பாக்கியினை முறையாக பராமரிக்காமையால் உத்தரவாதக் காலத்தில் 2 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக மின் பிறப்பாக்கி செயலிழந்து காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை<br><br>மின்பிறப்பாக்கியானது தற்போதுவரை இயங்கும் நிலையிலேயே இருக்கிறது, தானியங்கி மாற்ற ஆளி (ஏ.ரி.ஸ்) மட்டுமே பழுதடைந்திருந்தது. இது உத்தரவாத காலத்தினுள் இருந்தமையால் வழங்குனருக்கு இவ்விடயம் அறிவிக்கப்பட்டு அவரால் புதிய தொகுதியொன்னு மாற்றீடு செய்யப்பட்டது. |
| **4.2.4 நிலத்தை சீர்படுத்தி பல்கலைக்கழக வளவில் மரங்களை நடுதல்** | | |
| | முன்னாள் சனாதிபதியின் வருகை மற்றும் விஞ்ஞான பீடத்தின் கட்டிடத் தொகுதியினை திறந்து வைக்கும் வைபவத்திற்காக விஞ்ஞான பீடத்தின் கட்டிடத் தொகுதியின் பிரதான நுளைவாயில் நிலத்தை சீர்படுத்தி மரங்களை நடுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,752,740 தொகையினை பல்கலைக்கழகம் செலவிட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>இவ் ஒப்பந்தமானது 19.04.2014 அன்று முன்னாள் ஜனாதிபதி இவர்களின் வருகையை நினைவு கூருமுகமாக வழங்கப்பட்டிருந்தது மற்றும் இது தொடர்பான முன்னெடுப்புகள் 04.04.2014 |

<table>
<tr><td>(அ)</td><td>கொள்வனவு வழிகாட்டல் - 2006 இன் 2:14:1 ஆம் வழிகாட்டல் பிரகாரம் திறந்த போட்டி கேள்விகோரலை பின்பற்றாது உயர் கல்வி அமைச்சின் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி (எச்ஈரீசீ) செயற்றிட்டத்தின் மதியுரைஞரால் பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தகாரரை இந் நோக்கத்திற்காக பல்கலைக்கழகம் தெரிவுசெய்திருந்தது.</td><td rowspan="3">அன்று முன்னாள் உயர் கல்வி அமைச்சருடனான கலந்துரையாடலின் போது ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், அவரது சிபார்சின்படி மேற்படி உயர்கல்வி அமைச்சினால் சகல பல்கலைக்கழகங்களிலும் நில வடிவமைப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட நில வடிவமைப்பு ஆலோசகரான ரணமயூற நிலவடிவமைப்பு மற்றும் தாவரங்கள் நிறுவனம் பரிந்துரைக்கப்பட்டு ஒப்பந்தமானது பின்வரும் காரணங்களுக்காக வழங்கப்பட்டது;<br><br>1. அது ஒரு சிறப்புத் தேர்ச்சியுடைய வேலையாகும்<br>2. முன்னாள் ஜனாதிபதி அவர்களின் விஜயத்திற்கு குறுகிய காலமே இருந்தது<br>3. ஜனாதிபதி அவர்களின் வருகை சிங்கள, தமிழ் புத்தாண்டுக் காலப்பகுதியில் அமைந்திருந்ததால் அநேகமான வழங்குனர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மூடியிருந்தனர்<br>4. மட்டக்களப்பில் மேற்படித் தாவரங்களை வழங்கக்கூடிய வழங்குநர்கள் எவரும் இல்லை<br><br>இதனாலேயே திறந்த கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட முடியாது போனது.<br><br>கி.பல்கலைக்கழகத்தில் சீ.ஈ.சீ.பி (CECB) இனால் இக்காலப் பகுதியில் இதே போன்று செய்யப்பட்ட வேலைகளுக்காக வழங்கப்பட்ட விலைகளின் அடிப்படையில் இத்தொகை பல்கலைக்கழக வேலை பொறியியலாளர் மற்றும் ஆலோசகரால் பரிந்துரைக்கப்பட்டது</td></tr>
<tr><td>(ஆ)</td><td>ஒப்பந்தகாரர் தொடர்புடைய வேலைகளை 2014 ஏப்ரல் 18 ஆந் திகதி ஆரம்பித்திருந்த போதிலும், வேலைகள் முடிவடைந்த பின்னர் 2014 யூலை 01ஆந் திகதியன்றே திணைக்கள கொள்வனவுக் குழு (டீபிசீ) குறித்த ஒப்பந்தகாரரை தெரிவு செய்திருந்தது.</td></tr>
<tr><td>(இ)</td><td>சந்தையில் அவ்வாறான மரங்களுக்கு நிலவுகின்ற விலைகளைக் கருத்திற்கொள்ளாது அல்லது ஏனைய ஒத்த வழங்குனர்களிடமிருந்து விலைகளைக் பெற்றுக்கொள்ளாது ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் ரூபா 1,752,790 தொகை ஒப்பந்த காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.</td></tr>
<tr><td colspan="3">4.2.5 உப வேந்தரின் விடுதிக்கான வீட்டுப்பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்தல்</td></tr>
<tr><td colspan="2">ரூபா 1,447,873 பெறுமதியான சாப்பாட்டு மேசை, படுக்கையறை பொருட்தொகுதி, தேகப்பயிற்சி உபகரணங்கள், வரவேற்பறை இருக்கை, கட்டில்கள் மற்றும் நாற்காலிகள் போன்ற வீட்டுத் தளபாடங்கள் 2013 மார்ச் 12 ஆந் திகதி ஒப்பந்தகாரர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.<br>இது தொடர்பில் பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.<br>கொள்வனவு வழிகாட்டல்கள் - 2016 இன் 2:14:1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு நடைமுறையினைப் பின்பற்றாது மேற்படி பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2013 மார்ச் 12ஆந் திகதி மொறட்டுவையிலுள்ள வழங்குனர் ஒருவரிடமிருந்து பல்வேறு திருத்தங்களுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட செல்லுபடியற்ற துண்டுப்பரசுரமாக காணப்பட்ட கூறுவிலை உபவேந்தரால் அங்கிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கு ஆமலதிகமாக 10 சதவீத எல்லையொன்றை செலுத்தியமையால் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 131,625 இழப்பு ஏற்பட்டிருந்தது.</td><td>ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>உபவேந்தர் அவர்கள் தனது நியமனத்தின் பின் உபவேந்தர் விடுதியின் திருத்த வேலைகள் முடியும்வரை, திருகோணமலை வீதி, மட்டக்களப்பில் அமைந்துள்ள வாடகை விருந்தினர் விடுதியில் வதியும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அதே வேளை ஏற்கெனவே உபவேந்தர் விடுதியில் இருந்த தாபாடங்கள் மிகவும் பழமையானதும் காலாவதியாகியும் இருந்தன. உபவேந்தர் அவர்கள் உபவேந்தர் விடுதிக்கு திருத்த வேலைகள் முடிந்தவுடன் இடமாறவேண்டும் என்பதற்காக, வழங்குனர் புதிய மற்றும் நவீன தளபாடங்களை வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்.</td></tr>
</table>

| **4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**<br>பின்வரும் செயற்திறனின்மைகள் அவதானிக்கப்படுகின்றன. | | |
|---|---|---|
| (அ) | 2014 யூன் 24ஆந் திகதி இடம் பெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் பிரகாரம், 155 கணனிகள் மற்றும் 06 யூபிஎஸ் கொள்வனவு தொடர்பில் ஏற்பட்ட ரூபா 4,233,370 நட்டத்தை பல்கலைக்கழகத்தின் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த நட்டம் 2015 யூன் 30 ஆந் திகதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைக்காக விசாரணை உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் பரிந்துரைகளை மீளாய்வு செய்வதற்காகவும் ஆய்வு செய்வதற்காகவும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இது தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரி எனக்கு அறிவித்திருந்தார். | ஏற்றுக்கொள்ளவில்லை<br><br>கணக்காய்வு குழுவின் பரிந்துரைகள் 28.08.2014 அன்று நடைபெற்ற 247ஆவது முதவை கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. விசாரணை அதிகாரியின் சிபார்சுகளுடனான அறிக்கையினை ஆராய்ந்து ஆய்வு செய்து அறிக்கைப்படுத்த மூவரடங்கிய குழுவொன்றை 247ஆவது பேரவை நியமித்துள்ளது.<br><br>மூவரடங்கிய குழுவின் விசாரணை அறிக்கை மேலதிக நடவடிக்கைக்காக எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) | 2012 யூன் 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடக்படிக்கையின் படி, பல்கலைக்கழகம், திருகோணமலை வளாகம் மற்றும் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் என்பவற்றின் பிரதான திட்டத்தினை தயாரிப்பதற்கான மதியுரை வேலைகள் 2012 ஏப்ரல் 16 இலிருந்து 03 மாதத்திற்குள் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், வேலைகள் 2015 யூன் 30 ஆந் திகதி வரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளவில்லை<br><br>ஆலோசகர்களால் பிரதான திட்டத்தின் இறுதி வரைவு 15.06.2012 அன்று கையளிக்கப்பட்டு பல்கலைக்கழக உயர் அதிகாரிகள் முன்னிலையில் விளங்கப்படுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் காணிக்கான உறுதிகள் பெறும் நடவடிக்கை செயற்பாட்டில் உள்ளதாலும், இதில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டி இருப்பதாலும், ஆவனத்தின் இறுதிவடிவத்தைத் தயாரிப்பது தாமதமாகிறது. இருந்தாலும் பிரதான திட்டமானது 2012, கார்த்திகை மாதம் முதலாவதாகவும், சில திருத்தங்கள் மற்றும் மீள் பரிசீலனையுடன் 2012, வைகாசி மாதம் 20ஆம் திகதி இரண்டாவதாகவும் கையளிக்கப்பட்டது இதில் திருகோணமலை வளாகம் மற்றும் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (இ) | புலமைப்பரிசில்கள் பெற்று வெளிநாடுகளிற்குச் சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் (74) விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்கள் முடிவடைந்த பின்னர் கடமைக்குச் சமூகமளித்திருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி இருந்தனர். இருப்பினும், உடன்படிக்கையினை முறித்துக்கொண்டமைக்காக 74 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 160,937,945 தொகையினை அறவிடுவதற்கு | பகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டது<br><br>• சட்டமா அதிபர் அலுவலகத்திடம சட்ட நடவடிக்கைகளுக்காகவும் தவறியவர்களிடமிருந்து பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்காகவும் 12 வழக்குகளுடன் 74 எண்ணிக்கையான கடப்பாடு ஒப்பந்தத்தை மீறியோரது |

| | | |
|---|---|---|
| | 2015 யூன் 30 வரையிலும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 74 பிணைமுறி மீறல்கள் 12 விடயங்கள் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் முறித்துக் கொண்டோர்களிடமிருந்து நிலுவைகளை அறவிடுவதற்கும் சட்டமா சட்டமா அதிபர் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ளதாக இது தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரி எனக்கு அறிவித்திருந்தார். | வழக்குகள் உள்ளடங்கலாக, கையளிக்கப்பட்டுள்ளன. இரண்டு அரச வழக்கறிஞர்கள் இவற்றைக் கையாளுகின்றனர். ஏறக்குறைய ரூபா 9.7 மில்லியன் வரை தற்போது கடப்பாட்டு ஒப்பந்தத்தை மீறியோரிடமிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.<br>• சட்டமா அதிபர் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடர்பில் எதிர்காலத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாதென அறிவித்திருந்தார். இருப்பினும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட வழக்குகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான அனுமதியை தலைவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ மற்றும் செயலாளர்/ உயர்கல்வி அமைச்சு என்பவற்றிற்கூடாக சட்டமா அதிபர் அவர்களிடம் கோரியிருக்கின்றோம்.<br>• சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து இதுவரை எவ்விதாமான சாதகமான பதிலும் கிடைக்கப்பெறவில்லை. 31.12.2014 அன்று உள்ளபடியான கடப்பாடு ஒப்பந்தத்தை மீறியோரது தொகை பின்வருமாறு.<br>கட்டுப்பணத்தின் மொத்த தொகை - ரூபா 160,541,597.43<br>மொத்தமாகப் பெறப்பட்டது - ரூபா 10,190,871.88 |
| (ஈ) | வெளிநாட்டு புலமைப்பரிசில்களிற்கு விடுமுறைகளை வழங்குவதற்கு முன்னர் விரிவுரையாளர்களிடமிருந்து முற்பணங்களை அறவிடுதல் வேண்டும். எவ்வாறாயினும், உடன்படிக்கைகளை முறித்துக்கொண்ட 05 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 204,551 கூட்டுத்தொகையான நிலுவை முற்பணங்களை அறவிடாது அவர்களுக்கு புலமைப்பரிசில் விடுமுறைகளை பல்கலைக்கழகம் வழங்கியிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை<br><br>இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக் கோவை பிரிவு 15:10:1 அத்தியாயம் XXI ஆனது இதுதொடர்பாக விளக்கமாக பின்வருமாறு கூறுகிறது "வெளிநாடொன்றிற்கு தொழில் நிமித்தம் சம்பளமற்ற விடுமுறையில் செல்ல விண்ணப்பிக்கும் அலுவலர் ஒருவர் அவருக்கான விடுப்பினை பெற முன்னர், அவர் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த வேண்டும்". இது கற்கை விடுமுறையில் சம்பளத்துடன் செல்லும் ஆசிரியர்களுக்கு பொருத்தமற்றது. |
| (உ) | 1978 இன் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 72(1) ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 21.1.1 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம், சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II இற்கு பதவி உயர்த்தப்படுவதற்காக விரிவுரையாளர் ஒருவர், விரிவுரையாளர் பதவியில் (தகுதிகாண்) 08 ஆண்டுகளினுள் பட்டப்பின் படிப்பு பட்டத்தினை | ஏற்றுக்கொள்ளப்பட்டது<br>மேற் கூறப்பட்ட விரிவுரையாளர்கள் 2008ஆம் ஆண்டுகளில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின்போது பதவியுயர்வு பெற்றிருந்தனர். இக் காலப்பகுதியில் இவர்களால் அனுமதியைப் பெற்று முதுமாணிக் கற்கை நெறியை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முடிக்க முடியாமல் போனது. மேலும் இக் காலப்பகுதியில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பற்றாக்குறையை பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| | பூரணப்படுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், குறித்துரைத்த காலப்பகுதியில் பட்டப்பின்படிப்பு பட்டங்களை பூர்த்திசெய்திருக்காத பதினேழு விரிவுரையாளர்களை தற்காலிக விரிவுரையாளர்கள் பதவியில் மீண்டும் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II இற்கு பதவி உயர்த்தப்பட்டிருந்தனர். | எதிர்கொண்டிருந்தது. இதனால் பேரவையின் அங்கிகாரத்துடன் அவர்கள் பதவியுயர்த்தப்பட்டனர்.<br>சட்டம் மற்றும் தாபன விதிகள் கண்டிப்பாக பின்பற்றப்படுகின்றன. |
| (உ) | பல்கலைக்கழகத்தின் பழமையான விருந்தினர் விடுதிக் கட்டிடம் மிளாய்வாண்டில் ரூபா 13,399,453 செலவில் புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத்திலிருந்து கழற்றப்பட்ட மின்விசிறிகள், மின்குமிழ்கள், மின்பிறப்பாக்கி மற்றும் மின் ஆழிகள் 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பல்கலைக்கழகத்தின் மின்னியலாளரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இப் பொருட்களை உப வேந்தரின் விடுதியில் பராமரிக்கப்படுகின்ற இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை<br>மேற்படி பொருட்கள் காணாமல் போகவில்லை, இவை மின் பராமரிப்பாளரால் பராமரிப்புப் பகுதியில் கையளிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழகத்திலேயே இருக்கின்றன. சில மின்விசிறிகள் திருத்தப்பட்டு மாணவர் விடுதிகளில் மீண்டும் பொருத்தப்பட்டுள்ளன. மின்பிறப்பாக்கியானது சௌக்கிய பராமரிப்பு பீடத்தில் பாவனையில் உள்ளது. மேல் கூறப்பட்ட பொருட்கள் உபவேந்தர் விடுதிக்கு உரித்தானதல்ல, இது நிர்வாகப் பகுதியின் கீழ்வரும் விருந்தினர் விடுதிக்கு உரித்தானது. |
| (ஊ) | முன்னாள் உப வேந்தர் 2015 மார்ச் 05 முதல் அமுலுக்கு வரும் வகையில் பல்கலைக்கழகத்திலிருந்து சென்றிருந்தார். இருப்பினும், அவரிடமிருந்து ரூபா 45,182 கடன் மீதியினை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | ஏற்றுக்கொள்ளப்படவில்லை<br>முன்னாள் உபவேந்தரது பல்கலைக்கழக சேமலாப நிதியில் போதியளவு கணக்கில் இருப்பதால், பல்கலைக்கழக சேமலாப நிதியைப் பெறுவதற்காக அவரால் விண்ணப்ப பத்திரம் சமர்ப்பிக்கப்படும் போது இது மீளப்பெறப்படும். |
| **4.4 மனித வள முகாமைத்துவம்** | | |
| பல்கலைக்கழகத்தின் ஐந்து பீடங்களிற்கான பேராசிரியர்கள் உள்ளடங்கலாக பிரதான கல்விசார் பதவிகளில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும், கல்விசார் பதவிகளில் காணப்படுகின்றன. இருப்பினும், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2015யூன் 30 வரையிலும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | பகுதியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது<br>காலியாக இருக்கும் சில பதவிகள் 2014ஆம் ஆண்டு மார்கழி மாதம் பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தப்பட்டன ஆனால், உபவேந்தரின் பதவிக்காலம் முடிந்திருந்தாலும், ஜனாதிபதித் தேர்தல் 2015 தை மாதம் நடைபெற்றதாலும், பேரவை மீளவும் நியமிக்கப்படாததால் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. தற்போது கல்விசார் ஊழியர்களின் சகல வெற்றிடங்களையும் நிரப்பும் பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| **4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்** | |
| ''மென்படல செயலிகளின் எட்டு துணைப்பாகங்கள்'' என அழைக்கப்படும் மருத்துவ உபகரணம் 2012 ஆம் ஆண்டில் ரூபா 4.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மென்படல் செயலிகளின் பிரதான பாகத்தை கொள்வனவு செய்வதற்குத் தவறியமையால் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து இந்த உபகரணம் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. | பகுதியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது<br><br>சௌக்கிய பராமரிப்பு பீட, நோய்க்கூற்று உடலியல் துறையின் மைக்ரோடொம் (நுண்ணேக்கிச் சோதனைக்காக திசுக்களை வெட்டும் கருவியின் திசு பதப்படுத்தும் தொகுதியின்) சில பகுதிகள் பயன்படுத்தப்பட முடியவில்லை.<br><br>மேலும் மீதமாகவுள்ள பாகங்கள் விஞ்ஞான/ விவசாய பீடத்தில் கிடைக்கக்கூடிய நுண்ணேக்கிச் சேதனைக்காகத் திசுக்களை வெட்டும் கருவிகளுடன் பொருந்துகிறதா எனப்பார்த்து, அப் பீடங்களின் தேவையைப் பொறுத்து இவற்றை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>திசு பதப்படுத்தும் தொகுதிக்காக எவ்வித கொடுப்பனவும் இதுவரை செலுத்தப்படவில்லை. |
| **5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்** | |
| **5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்** | |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 16 ஆந் திகதியன்றே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது<br><br>2014ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கறிக்கை 2015ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10ஆம் திகதி முடிவடைந்திருந்தது. 2015ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதல் பிரதம நிறைவேற்று அதிகாரி எவரும் கிழக்குப் பல்கலைக்கிகத்தில் இல்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பதில் பதிவாளர் அவர்கள் புதிய உபவேந்தர் நியமிக்கப்படும்வரை அவரின் வழமையான கடமையை கவனிக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தார். 2015ஆம் ஆண்டு சித்திரை 2ஆம் திகதியே தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். வேறு மாற்று வழிகள் எதுவும் பல்கலைக்கழகத்திற்கு இல்லாததால் முடிக்கப்பட்ட இறுதிக் கணக்கறிக்கையானது பதில் பதிவாளர் மற்றும் பதில் நிதியாளர் அவர்களின் கையொப்பத்துடன் மட்டக்களப்பு கணக்காய்வாளர் தலைமையதிகாரி அலுவலகத்தில் 2015ஆம் ஆண்டு பங்குனி மாதம் 11ஆம் திகதி கையளிக்கப்பட்டது. ஆனாலும் பத்து நாட்கள் தாமதமானதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.<br><br>தகுதிவாய்ந்த அதிகாரி அவர்களின் நியமனத்தின் பின் 29.05.2015 அன்று நடைபெற்ற அவரது முதலாவது பேரவைக் கூட்டத்தில் (253ஆவது) இறுதிக் கணக்கறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதற்காக அங்கிகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| **5.2 உள்ளகக் கணக்காய்வு** | |
| வினைதிறன் மற்றும் பயனுள்ள வகையில் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக நிரந்தர மற்றும் அனுபவமுள்ள பதவியணியினர் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை<br><br>கிழக்குப் பல்கலைக்கழக காணக்காய்வுப் பிரிவானது அனுபவம் வாய்ந்த உதவிக் கணக்காளர் அவர்களின் கீழ், ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ஆளனிவள உதவியுடன் செயற்பாடுகளைத் திறமையுடன் முன்னெடுத்து வருகிறது. இருந்தும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கம் மற்றும் வேலையின் அளவின் அதிகரப்புக்கு அமைவாக மேலதிக ஊழியர்களை (பணிநிலையாளர்களை) இணைப்பதற்கு ஏற்கெனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்மொழியப்பட்டுள்ளது. |
| **5.3 கொள்வனவுத் திட்டம்** | |
| கொள்வனவு வழிகாட்டல்கள் 4.2.1 (அ) மற்றும் 3.2.3 இன் பிரகாரம் குறைந்தது மூன்று ஆண்டு காலத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | ஒப்புக்கொள்ளப்பட்டது<br><br>நடைமுறையில் பிரதான கொள்முதல் திட்டமானது ஒருவருடத்துக்கே தயாரிக்கப்படுகிறது. எனினும் 2015ஆம் ஆண்டு முதல் கொள்முதல் வழிகாட்டியானது பின்பற்றப்படும். |
| **5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு** | |
| பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டப்படுகின்றது. | குறித்துக்கொள்ளப்பட்டது<br><br>பாரிய வேறுபாட்டிற்கான காரணங்களாவன;<br><br>1. விஷேட படி அதிகரிப்பு மற்றும் 20% மேலதிக விசேட படி<br>2. மின்சாரம், நீர், போக்குவரத்து மற்றும் வாடகை என்பவற்றின் பாவனை அதிகரிப்பு<br>3. உயர்கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக போதியளவு நிதி ஒதுக்கங்கள் இல்லாத நிலையிலும், புதிய விடுதிகளுக்கு தளபாட வசதிகள் செய்யப்பட்டமை<br>4. காசல்லாத சொத்துக்களின் தேய்மானம் மற்றும் முதலீட்டுத் தள்ளுபடி என்பவற்றின் அதிகரிப்பு |
| **6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்** | |
| கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.<br><br>(அ) கணக்கீடு<br>(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்<br>(இ) கடன்கள் மற்றும் முற்பணங்கள் அறவிடுதல்<br>(ஈ) ஒப்பந்த நிர்வாகம்<br>(உ) மனித வளங்கள் முகாமைத்துவம் | குறித்துக்கொள்ளப்பட்டது |

**கலாநிதி ரீ ஜெயசிங்கம்**
உபவேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை